ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2035/51 - 2017 සැප්තැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2017.09.08

*2035/51 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 24/51* (iv)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால த சில்வா,
போக்குவரத்து மற்றும்
சிவில் விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2017, செத்தெம்பர் 08.

ஒழுங்குவிதிகள்

1. (1) இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (மோட்டார் முச்சக்கர வண்டி) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படுவதுடன், 2017 ஆம்ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (1) வாடகைக்கு அல்லது வேறு வகையில் ஆட்களை ஏற்றிச் செல்லும் நோக்கத்திற்காக மோட்டார் முச்சக்கர வண்டியினைப் பயன்படுத்துகின்ற அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டியின் ஒவ்வோர் உரிமையாளரும் மோட்டார் முச்சக்கர வண்டியின் பயணிகளுடைய அறைக்குச் செல்லும் வலப்பக்க நுழைவாயில் பயணி ஒருவரால் உள்வருவதை அல்லது வெளிச்செல்வதைத் தடுப்பதற்காக பகுதியளவில் அல்லது முழுமையாக நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) (அ) மோட்டார் முச்சக்கர வண்டியொன்றின் சாரதி ஒருவர் மோட்டார் முச்சக்கர வண்டியின் வலப்பக்கத்தினால் ஏறி இறங்குவதன் மூலம் மோட்டார் முச்சக்கர வண்டிக்குள் உள்நுழைவதற்கோஅல்லது வெளிச் செல்வதற்கோ எவரேனும் பயணியை அனுமதித்தல் ஆகாது.


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) ஆளெவரும் மோட்டார் முச்சக்கர வண்டியின் வலப்பக்கத்தினால் ஏறி இறங்குவதன் மூலம் மோட்டார் முச்சக்கர வண்டிக்குள் உள்நுழைதலோ அல்லது வெளிச் செல்லுதலோ ஆகாது.

3. மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் உரிமையாளர் ஒருவர் -

(அ) மோட்டார் முச்சக்கர வண்டியின் எல்லா ஆசனங்களினதும் தாங்குகைகளும் குறித்த நிலையில் உறுதியாக இருத்தல் வேண்டும் எனவும் ஒவ்வோர் ஆசனத்தினதும் முன் வழியாக நேர்கோடு ஒன்றில் அளவிடப்பட்ட குறைந்தபட்சம் 382 மற்றும் 230 மில்லி மீற்றர்கள் முறையே ஒவ்வொரு வயதுவந்தவருக்கும் சிறுவருக்கும் அனுமதிக்கப்படுதல் வேண்டுமெனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இவ்வொழுங்குவிதியின் நோக்கத்திற்காக, மூன்று வயதிற்கும் பன்னிரண்டு வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்கள், ஒரு சிறுவராக கணக்கிடப்படுதல் வேண்டும்;

(ஆ) சாரதி ஆசனத்தின் முன் முடிவிடத்திற்கும் முன் முடிவிடத்தின் ஊடான செங்குத்தான பாதைக்கும் இடையிலான மிகக் குறைந்த தூரம் 300 மில்லி மீற்றர்களைவிட குறைவாக இருத்தலாகாது எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(இ) பயணி ஆசனத்தின் முன் முடிவிடத்திற்கும் முன்ஆசனத்தின் பின்தாங்கிக்கும் மிகக் கிட்டிய புள்ளியின் ஊடான செங்குத்தான பாதைக்கும் இடையிலான மிகக் குறைந்த தூரம் 230 மில்லி மீற்றர்களைவிட குறைவாக இருத்தலாகாது எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஈ) பொருத்தப்பட்ட அடுத்தடுத்த இரு ஆசனங்களின் பின்தாங்கிகளுக்கு இடையிலான ஆகக்குறைந்த தெளிவான தூரம் 660 மில்லி மீற்றரைவிட குறைவாக இருத்தலாகாது எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(உ) ஒன்றுக்கொன்று நேர் எதிரான ஆசனங்கள் மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றிற்குப் பொருத்தப்படுதலாகாது எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(உ) வாகனத்தின் உயரமானது அகலத்தின் நூற்றைம்பது சதவீதத்தைவிடக் கூடுதலாக இருத்தலாகாது எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4. மோட்டார் முச்சக்கர வண்டியின் சாரதி தவிர்ந்த வேறு ஆளெவரும் சாரதி அறையில் அல்லது சாரதியின் ஆசனத்தில் ஏற்றப்படுதலாகாது.

5. மோட்டார் முச்சக்கர வண்டியின் வேக வரையறை, 2012, யூன் மாதம் 22 ஆந் திகதிய 1763/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மோட்டார் வாகன (வேக வரையறை) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

6. மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் உரிமையாளர் அல்லது சாரதி, அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டி வீதியில் சென்று கொண்டிருக்கும் வேளையில், ஏதேனும் விளம்பரம், துண்டுப்பிரசுரம் அல்லது கைத்துண்டை விநியோகிப்பதற்கு அல்லது வாகனத்தின் வெளிப்புறத்தே நீட்டிக் கொண்டிருக்குமாறு எவையேனும் பொருட்களை ஏற்றுவதற்கு எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.

7. நகர்ந்துகொண்டிருக்கும் அல்லது தரித்து நிற்கும் மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் சாரதி ஏனைய வீதிப் பாவனையாளருக்கு இடைஞ்சலை அல்லது தொல்லையை ஏற்படுத்துமளவிற்கு ஒலியை வெளிப்படுத்தும் ஏதேனும் சாதனம் அல்லது கருவியைப் பயன்படுத்தலாகாது அல்லது பயன்படுத்தப்படச் செய்வித்தல் ஆகாது. ஒலியானது மோட்டார் முச்சக்கர வண்டியினுள் அடக்கப்பட்டிருக்கின்றது எனவும், அதில் பயணிக்கின்றவர்கள் மட்டும் கேற்பதற்கென உட்கருதப்பட்டது எனவும் உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

8. (1) மோட்டார் முச்சக்கர வண்டியொன்றின் உரிமையாளரொருவர் அல்லது சாரதியொருவர் -

(அ) எந்த வேகத்தில் மோட்டார் முச்சக்கர வண்டி செலுத்தப்படுகின்றதோ அந்த வேகத்தை மோட்டார் முச்சக்கர வண்டிச் சாரதிக்கு எல்லா நேரங்களிலும் தெளிவாகச் சுட்டிக் காட்டுவதற்கான அத்தகைய நிலை ஒன்றில் மோட்டார் முச்சக்கர வண்டிக்கு கதிமானி பொருத்தப்பட்டிருக்கின்றது எனவும் ;

(ஆ) மோட்டார் முச்சக்கர வண்டியின் சாரதி மோட்டார் முச்சக்கர வண்டியின் முன்பக்கத்திற்கு தடையற்ற பார்வையைப் பெறக்கூடுமான அத்தகைய முறை ஒன்றின் மின்னியல் அல்லது இலத்திரனியல் தொழிற்பாட்டு வளித்திரைத்துடைப்பம் பொருத்தப்பட்டிருக்கின்றது எனவும் ;

(இ) வாயுவியக்கு வளையங்கள் பொருத்தப்பட்டு, அவை வேறுபட்ட அளவுகளில் இருப்பின், அம்முச்சக்கர வண்டி அதே முறையில் ஒவ்வோர் அளவிலும் குறைந்த பட்சம் உறுதியானதொரு காற்றடித்த வளையத்தைக் கொண்டு செல்லுதல் வேண்டும் என்பதையும்;

(ஈ) முச்சக்கர வண்டி ஒவ்வொன்றும், வீதியில் நிற்கின்ற சமயத்தில் சில்லொன்றுடன் அல்லது அச்சொன்றுடன் காற்றடித்த உதிரி வலயத்தை விரைவாகப் பொருத்துவதற்குப் பயன்படுகின்ற அவசியமான உபகரணங்களைக் கொண்டு செல்கின்றது என்பதையும்; அத்துடன்

(உ) வானிலை நிலைமைகளிலிருந்து சாரதியையும் பயணிகளையும் பாதுகாப்பதற்கு மறைப்பொன்று பொருத்தப்பட்டிருப்பதையும்,

உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) மோட்டார் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் பின்வரும் ஆக்கக் கூறுகள் மோட்டார் முச்சக்கர வண்டிக்குப் பொருத்தப்படுகின்றன எனவும் அவை நல்ல தொழிற்படு நிலைமையில் உள்ளன எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும் :-

(அ) இரண்டு வெளிப்புறப் பின் பார்வைக்கண்ணாடிகள் ;

(ஆ) நேர் மற்றும் தாழ்ந்த ஒளிக்கற்றைகளுடன் கூடிய தலைமை விளக்குகள் மற்றும் காட்டி ;

(இ) பின்புற அல்லது நிறுத்துதல் விளக்கு ;

(ஈ) பக்கத் திசைகாட்டி விளக்கு ;

(உ) பின்னகற்றல் விளக்கு ;

(ஊ) தரிப்பிட விளக்குகள் ; அத்துடன்

(எ) குழல்.

9. மோட்டார் முச்சக்கர வண்டியானது கட்டணம் ஒன்றுக்காக அல்லது வெகுமதி ஒன்றுக்காக ஆட்கள் அல்லது பண்டங்களைக் கொண்டு செல்லும் நோக்கத்திற்காகப் பயன்படுத்துப்படுகின்றவிடத்து -

(அ) பின்வரும் தகவல்கள் பயணிகளுக்குத் தெளிவாகத் தெரியக்கூடியளவிற்கு சாரதி ஆசனத்தின் பின்பக்கத்தில் வெளிக்காட்டி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் :-

(i) பதிவு இலக்கம் ;

(ii) சாரதியின் பெயரும் சாரதி உரிம இலக்கமும் ;

(iii) சாரதியின் புகைப்படம் ஒன்று (அளவு : 65 X 50 மில்லி மீற்றர்கள்) ; அத்துடன்

(iv) அவசரகால நிலைமையில் அறிவிப்பதற்காக வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ள அந்தந்த பொலிஸ் நிலையங்களின் தொலைபேசி இலக்கங்கள் ; அத்துடன்

(ஆ) மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் சாரதி அவர் கடமையிலிருக்கும் எல்லா நேரங்களிலும் ;-

(i) மரியாதையான மற்றும் ஒழுங்கான முறையில் நடந்து கொள்ளுதல் வேண்டும் ;

(ii) புகைத்தல் ஆகாது ;

(iii) வாடகைக்கு அமர்த்தியவரால் அவர் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் வாடகைக்கு அமர்த்துதலை முடிவுறுத்தலாகாது ; அத்துடன்

(iv) பயணிகளால் வேறு வகையில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி, மிகக் குறைந்த நேரத்தினுள் மிகக்கிட்டிய சாத்தியமான மார்க்கம் மூலம் அவர்களது சேரிடங்களிற்கு அவர்களை ஏற்றிச் செல்லுதல் வேண்டும்.

10. (1) வாடகைக்காக அல்லது வேறு வகையாக ஆட்களை அல்லது பண்டங்களை இடம் பெயர்க்கும் நோக்கத்திற்காக மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றினைப் பயன்படுத்துகின்ற உரிமையாளர் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் தொழிற்பட வேண்டிய முச்சக்கர வண்டி மானியைப் பொருத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய கட்டணக் கொடுப்பனவின் மேல், பயணியின் வேண்டுகோளின் மீது, பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டிச் சாரதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு ஆனது, பயணித்த தூரம், வாகனப் பதிவிலக்கம், அறவிடப்பட்ட தொகை மற்றும் பற்றுச்சீட்டுத் திகதியை உள்ளடக்குதல் வேண்டும்.

11. மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் உரிமையாளர் ஒருவர், மோட்டார் முச்சக்கர வண்டியின் உற்பத்தியாளரினால் அதன் மீது அடையாளமிடப்பட்ட விவரணமான தகவல் தவிர, எழுத்துக்கள், எண்கள் அல்லது இலக்கங்கள் எதையும் மோட்டார் முச்சக்கர வண்டியின் முன்புறத்திலும் பின்புறத்தின் மீதும் அடையாளமிடப்படவில்லை என உறுதிப்படுத்துததல் வேண்டும்.

12. 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதிய 2001/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மோட்டார் வாகன (மோட்டார் முச்சக்கர வண்டி) ஒழுங்குவிதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

13. இவ்வொழுங்குவிதிகளில் " மோட்டார் முச்சக்கர வண்டி" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9-636

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.